தேர்ச்சியை உடனுக்குடன் பெறாவிட்டாலும் கூட முதல் ஆண்டு பெற வேண்டிய தேர்ச்சியை இரண்டாம் ஆண்டுக்குள் பெற்று முடித்தால்தான் மூன்றாம் ஆண்டுக்குச் செல்லலாம் என்பது போல் வைத்து இருக்கிற முறையில் ''இட் இஸ் நாட் டோட்டல் பிரேக்'' படிக்கட்டுக்கள் முறையான பிரேக் தான் இப்போது இருக்கிறது. முதல் படிக்கட்டில் வெற்றி அடையாவிட்டாலும் மூன்றாவது படிக்கட்டுக்கு வருகிற போதாவது முதல் படிக்கட்டில் வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்பது போன்ற சில விதிகள் இருக்கின்றன. பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் அவர்களுக்கு மாணவர்களின் வேண்டுகோள் அனுப்பப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஒரு முறை என்னைக் காண்கிற போது துணை வேந்தரே கூடத் தனியாக இவைகளைப் பற்றி முடிவு எடுக்க முடியாது என்று கூறினார்.

10-15 மணி

நான் கூட ஆலோசனைதான் வழங்க முடியும். படிப்புக்காகக் கல்வியின் தரத்தைக் கூடுமான வரையில் ஒழுங்குபடுத்துவதற்காக இருக்கிற அக்கடமிக் கவுன்சில்தான் இந்த மாற்றம் பற்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அங்கும் ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்குமே தவிர உடனடியாக ஏற்றுக் கொள்ள முடியாது.

அதே போல் பொறியியல் கல்லூரி மாணவர்கள் எல்லோரும் எல்லா இடத்திலும் பிரேக் சிஸ்டம் கூடாது என்று கேட்கவில்லை. சில கல்லூரிகளில் சில மாணவர்கள் இந்தத் தேர்வு வருகிற நேரத்தில் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். உடனடியாக என்ன செய்ய முடியும் என்று எங்களால் தெரிவிக்க முடியவில்லை என்று பல்கலைக் கழகத் துணை வேந்தர் தெரிவித்தார். ஒருவேளை அதற்குப் பின்னர் ஏதேனும் அவருடைய எண்ணங்களில் மாற்றம் இருக்கிறதா அல்லது ஏதேனும் செய்யக் கூடியது இருக்கிறதா என்பது இன்றைக்கு என்னால் சொல்ல முடியாததாக இருக்கிறது.

அதைவிட முக்கியமாக சுய நிதிக் கல்லூரியில் சேர்ந்து பயில்கின்ற மாணவர்கள்தான் அவர்களில் ஒரு குறிப்பிட்ட ஒரு சாரார் அந்த சுய நிதிக் கல்லூரியில் அவர்கள் பெற்ற பயிற்சி போதாது என்ற காரணத்தால், நாங்கள் பயிற்சி பெற்றோமோ இல்லையோ மேல் வகுப்புக்கு அனுப்பப்பட வேண்டும் என்று கேட்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதைப் பல்கலைக் கழகம் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைப் பார்த்துத் தான் தீர்மானிக்க முடியும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

3. கவன ஈர்ப்பு

பேரூராட்சிகளிலும் ஊர் நலப் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள ஊர்நலப் பணியாளர்கள் பதவிகளைப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நடப்பாண்டு முதல் பேரூராட்சிகளிலும் இத்திட்டம் அமுல் படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பாப்பா உமாநாத், வெ. இராசு, கே. ரமணி, கோ. வீரையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கொடுத்த கவன ஈர்ப்பு மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு:

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி நான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.